

**ஈகை**

குறள் 224

**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகங் காணும் அளவு.**

ஈதல் பண்புடையவர்களுக்கு, தம்மை நாடிவரும் இரவலரின் புன்னகை பூத்த முகத்தைக் கண்டு இன்புறும் வரையில், அவருக்காக இரக்கப்படுவது ஒரு துன்பமாகவே தோன்றும்.

# இளையோர் உலகம்




## இப்படியும் நடக்குமா..?

அது 1963-ம் மே 5ம் திகதி.

ஜப்பானின் நகோயா நகரில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த கார்ப் பந்தய தடத்தில் இரண்டாவது உலகப் போருக்குப் பின் முதல் கார் பந்தயம் நடைபெற்றது. அதில் உற்சாகத்துடன் பங்கேற்றார் மசாவோ அசானோ என்ற வீரர். அவர் ஓட்டியது வெள்ளை நிற 'ஒஸ்ரின் ஹிலி' கார். எண் 42.

அதைப் பார்த்த எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஜப்பானிய மொழியில் 42 என்ற சொல் 'ஷிங்கு' என்பதை ஒட்டிவரும். 'ஷிங்கு' என்பதற்கு ஜப்பானிய மொழியில் 'மரணம்' என்று அர்த்தம். அதனால் ஜப்பானியர்கள் அந்த எண்ணைத் தவிர்த்துவிடுவார்கள். அதை சுட்டிக்காட்டியவர்களிடம், அதெல்லாம் மூடநம்பிக்கை என்று புறக்கணித்துவிட்டு பந்தயத்தில் இறங்கிவிட்டார் மசாவோ.

முதல் சுற்றின் முடிவிலேயே முன்னணி பெற்றுவிட்டார் மசாவோ. கடைசிச் சுற்றை 208 கிலோ மீட்டர் வேகத்தில் அவரது கார் எட்டியபோது கட்டுப்பாட்டை இழந்து தடுப்புச் சுவரில் மோதியது. படுகாயமடைந்த மசாவோ இறந்துவிட்டார். அந்த விபத்தைத் தொடர்ந்து, ஜப்பானில் கார்ப் பந்தயத்தில் பயன்படுத்தப்படும் எந்த காருக்கும் '42' என்ற எண்ணைப் பயன்படுத்தக் கூடாது என்று தடை விதித்து விட்டது ஜப்பான் மோட்டார் சம்மேளனம்.

அடுத்த ஆண்டு வழக்கம்போல் கார்ப் பந்தயம் நடைபெற்றது. அந்தப் போட்டியின் முடிவில், பந்தயத்தில் ஓடிய கார்களையும், அவற்றின் நேரத்தையும் பதிவு செய்த இரு பணியாளர்கள், தங்கள் குறிப்புகளை ஒப்பிட்டுச் சரிபார்த்தனர். அப்போது அவர்கள் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர். இருவரும் '42' என்ற எண் காரைப் பற்றி குறித்திருந்தனர். உண்மையில் அப்படி ஒரு கார் போட்டியில் பங்கேற்கவே இல்லை. முந்தை ஆண்டு விபத்தில் இறந்த மசாவோதான், பந்தயத்தை 'முடிக்க' வந்தாரா என்று இன்று வரை வியப்புடன் பேசிக் கொண்டார்கள்.

## போட்டியில் வென்ற நைல் நதி

உலகின் மிக நீளமான நதி எது என்பதில் தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் நதியா அல்லது ஆபிரிக்க கண்டத்தில் உள்ள நைல் நதியா என்ற சர்ச்சை நீண்ட காலமாகவே இருந்து வந்தது.

கடைசியாக அது கடந்த நூற்றாண்டின் மத்தியில்தான் அந்தப் பிரச்சினை அளந்து பார்த்து தீர்த்து வைக்கப்பட்டது. நைல் நதியின் நீளம் 4146 மைல் என்றும் அமேசான் நதியின் நீளம் 4007 மைல் என்று இறுதியாக நிர்ணயிக்கப்பட்டு, நைல் நதியே இந்தப் போட்டியில் வென்றது.

## பேராசை பெருநஷ்டம்

உதயபுரி நாட்டின் அரசன் உதயவர்மனுக்கு எல்லாம் இருந்தும், பெயர் சொல்ல ஒரு வாரிசு இல்லை. அந்தக் கவலை அவனை வெகுவாக வாட்டியது. எனவே கோவில்கள்தோறும் பூஜை, அரண்மனையில் யாகங்கள் நடத்தினான் அரசன். என்ன செய்தும் பட்டத்து ராணிக்கு குழந்தை பிறக்கவே இல்லை. இந்நிலையில் ஒருநாள் மிகவும் வேதனையோடு தெய்வத்திடம் முறையிட்டான் உதயவர்மன்.

தெய்வமும் மனம் இரங்கி அவன் முன் தோன்றி, "அரசனே... உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேள்" என்றது. தெய்வம் கனவில் தோன்றியதும் அரசன் மிகுந்த ஆனந்த மடைந்தான். "பிரார்த்தனை பலித்துவிட்டதே... தெய்வமே நம் கனவில் வந்து கேட்கிறதே!" என்று பூரித்தான்.

பெரிதாக என்ன கேட்பது என்று யோசித்தான் உதயவர்மன். அரசன்தான் என்றாலும் ஆசை யாரை விட்டது? "என்ன யோசிக்கிறாய்? என்ன வரம் வேண்டுமானாலும் கேள்" என்றது தெய்வம். "தெய்வமே... எனக்கு வாரிசாக ஒரு மகன் வேண்டும்..." என்றான் உதயவர்மன்.

"அவ்வளவுதானே? தருகிறேன்..." என்றது தெய்வம்.

"இல்லையில்லை... நான் இன்னும் கேட்டு முடிக்கவில்லை. எனக்குப் பிறக்கும் மகன் அழகாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும்..." "நிச்சயம் அவ்வாறே இருக்கும்..."

"நான் இன்னும் முடிக்கவில்லையே? எனக்குப் பிறக்கும் குழந்தை எச்சில் துப்பினால் அது தங்கமாக மாற வேண்டும். இதுதான் நான் தங்களிடம் பணிவாகக் கேட்கும் வரம்..." அரசன் இவ்வாறு கேட்டுவிட்டு, தெய்வம் வரம் தருமோ, இல்லையோ என்று படபடப்போடு அதைப் பார்த்தான்.

"சரி... உன் விருப்பப்படியே வரம் தருகிறேன்..." என்று கூறிவிட்டு தெய்வம் மறைந்தது.

பத்து மாதங்கள் கழித்து ராணிக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தையின் வாயில் ஒரு விரலை விட்டு எச்சிலை எடுத்துப் பார்த்தான் மன்னன் உதயவர்மன். என்ன ஆச்சரியம்! அது உடனே தங்கமாக மாறிவிட்டது. அதைக் கண்ட அரசனுக்கு எல்லையற்ற ஆனந்தம். குழந்தையின் வாயிலிருந்து எச்சில் வழிந்தால் அது உடனே தங்கமாக மாறிக் கொண்டிருந்தது.

அரண்மனை கஜானா தங்கத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. குழந்தையும் வளர்ந்து அரசிளங்குமரன் ஆனான். இதற்கிடையில், அரண்மனை முழுவதும் தங்கமாக மாற்றியிருந்தான் அரசன் உதயவர்மன். அரண்மனை முழுக்க முழுக்க தங்கத்தால் வேயப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நாட்டு மக்கள் வியப்புடன் பேசிக் கொண்டனர்.

அதே நேரம், பக்கத்து நாட்டில் உள்ள கொள்ளையர்களை அந்தச் செய்தி எட்டியது. இளவரசன் மூலமாகத்தான் அரசன் உதயவர்மன் அளவில்லாத தங்கத்துக்குச் சொந்தக்காரனாக ஆகியிருக்கிறான் என்றும் அறிந்துகொண்டார்கள்.

இளவரசனை மட்டும் எப்படியாவது கடத்திவந்து விட்டால் போதும், வாழ்நாள் முழுவதும் தங்களுக்கு அளவில்லாத தங்கம் கிடைத்துக் கொண்டே இருக்கும் என்று கணக்கிட்டார்கள். தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். ஒருமுறை காட்டுப் பகுதிக்குத் தனது பரிவாரங்களுடன் வேட்டைக்கு வந்த இளவரசன் வழி தவறிவிட்டான்.

இளவரசனை கண்காணித்துக் கொண்டே இருந்த கொள்ளையர்கள், அதுதான் தக்க சமயமென்று அவனை மடக்கிக் கடத்திச் சென்றனர். தங்களின் இடத்துக்கு இளவரசனைக் கொண்டு வந்தவர்கள், அவனை எச்சில் துப்பும்படி கூறினர். அது தரையில் தங்கமாக விழுவதைக் கண்டு அளவில்லாத மகிழ்ச்சி கொண்டனர்.

இளவரசன் இரவில் தூங்கும்போது ஆலோசித்தனர். அப்போது, 'எவ்வளவு நாளைக்குத்தான் இளவரசனை வைத்துப் பராமரித்து, எச்சில் துப்பும்படி கூறுவது? எனவே, இளவரசனைக் கொன்று, தங்கம் சுரக்கும் அவனது குடல் பகுதியை வெளியே எடுத்துவிட்டால் அது எப்போதும் தங்கமாக சுரந்து கொண்டிருக்கும். நாமும் கஷ்டமின்றித் தங்கத்தைப் பெறலாம்...' என்று பேசிக் கொண்டனர். தூங்குவது போல் கண் மூடிக் கிடந்த இளவரசன் அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். தனக்கு எதை பெருமை தரும் விடயமாக இதுநாள் வரை கருதி வந்தோமோ அதனாலேயே தனது உயிர் பறிபோகப் போகிறதே என்று வேதனை அடைந்தான். அப்போது, காட்டில் இளவரசனை தேடித் திரிந்த பரிவாரங்கள் கொள்ளையர்களின் கூடாரத்துக்குள் திடீரென்று நுழைந்தனர்.

அவர்களைப் பார்த்த கொள்ளையர்கள் இளவரசனை விட்டுவிட்டுத் தலை தெறிக்க ஓடிவிட்டனர்.

இளவரசன் தனது பரிவாரங்களுடன் நாடு திரும்பினான். இளவரசனை ஓடிவந்த பார்த்த அரசன், அவனை கொள்ளையர்கள் கடத்திச் சென்றதை அறிந்து கட்டியணைத்துக் கண்ணீர் விட்டான்.

தனது பேராசையே தன் மகனின் உயிருக்கு உலைவைக்கும் அபாயத்துக்குக் கொண்டு சென்று விட்டதே என்று எண்ணியெண்ணி வருந்தினான். பூஜையறைக்கு ஓடிச் சென்று இறைவனை மனமுருகி வேண்டினான்.

அப்போது அசரீரியாகக் குரல் ஒலித்தது...

'பேராசை கொண்டால், நாட்டு மன்னனாக இருந்தாலும் அவதிப்படத்தான் நேரும் என்பதை உணர்ந்து கொண்டாய். இனிமேலாவது பேராசையை விட்டொழித்து நல்வழியில் கவனம் செலுத்து'

என்றது அக்குரல்.

அந்தக் கணமே அரசனிடம் பேராசைக் குணம் ஒழிந்தது.

நாட்டு மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி செலுத்தத் தொடங்கினான்.

– கே.எஸ். செல்வபுவனேஸ்வரி

## உலகின் மிகப்பெரிய எரிமலைகளும் அவை அமைந்துள்ள நாடுகளும்

01. ஆலதிரி – சிலி 19,882 அடிகள்
02. லாஸ்கர் – சிலி 19,652 அடிகள்
03. கொட்டபாக்சி – ஈக்வடார் 19,347 அடிகள்
04. சங்கே – ஈக்வடார் 17,749 அடிகள்
05. துங்குராவுவா – ஈக்வடார் 16,512 அடிகள்
06. கொடகாசி – ஈக்வடார் 16,197 அடிகள்
07. புரோஸ் – கொலம்பியா 15,604 அடிகள்
08. கிலையுசிவ்ஸ்க்யா – ர?யா 15,584 அடிகள்
09. ராங்கல் – அமெரிக்கா 14,004 அடிகள்
10. தஜுமுல்கோ – குவாதிமாலா 13,812 அடிகள்
11. எட்னா – இத்தாலி 10,705 அடிகள்



## விடுகதை

**சென்ற இதழின் விடைகள்**

| | |
|---|---|
| 01. தவளை | 06. விமானம் |
| 02. நட்சத்திரங்கள்-வானம் | 07. தலைமுடி |
| 03. எறும்பு | 08. கடல் |
| 04. ஊசி-நூல் | 09. மான் |
| 05. ரம்பம் | 10. காளான் |

1. இணையாத இருவர் பயணத்துக்கு ஏற்றவர்கள் அவர்கள் யார்?
2. இட்டேன் எடுக்க முடியலை அது என்ன?
3. இருட்டுக்காட்டிலே குருட்டுப்பன்றி மேயுது அது என்ன?
4. உறவுக்காரர் அல்ல ஆனாலும் உரிய தகவல் தருவார் அவர் யார்?
5. உருவத்தில் சிறியவன் உழைப்பில் பெரியவன் அவன் யார்?
6. இரண்டு கிணற்றுக்கு ஒரு பாலம் அது என்ன?
7. ஐவருக்கும் ஒரே வீடு அது என்ன?
8. ஒருவனுக்கு உணவளித்தால் ஊரையே கூட்டுவான் அவன் யார்?
9. ஓடுவான் சாடுவான் ஒற்றைக்காலில் நிற்பான் அவன் யார்?
10. ஓடுகிற குதிரைக்கு விலாவெல்லாம் ஓட்டை அது என்ன?

விடைகள் அடுத்த இதழில்...